தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# பசுமை தீபாவளிக்கு விழிப்புணர்வு போஸ்டர்

**கோவை, நவ.4–**

கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், பசுமை தீபாவளி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில் நடந்த விழாவை, நிறுவன இயக்குனர் குன்னிகண்ணன் தொடங்கி வைத்தார்.

அவர் பேசுகையில், ''பசுமை தீபாவளி கொண்டாடுவதன் மூலம் நம் இயல்பு, சுற்றுச்சூழல், இயற்கை வளங்களை காப்பாற்ற முடியும்.

சூழலை காப்பாற்றுவது காலத்தின் தேவை. அதுவே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்,'' என்றார்.

முதுநிலை முதன்மை விஞ்ஞானி கண்ணன் வாரியர் பேசுகையில், காற்றின் தரக்குறியீடு மற்றும் பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றி விளக்கினார்.

பசுமை தீபாவளி குறித்த விழிப்புணர்வு போஸ்டர்கள் வெளியிடப்பட்டன. அதன் டிஜிட்டல் பிரதிகள் மின்னணு முறையில் மாணவர்கள், பொது மக்களுடன் பகிரப்பட்டன,

'என்விஸ்' மூத்த திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

60. News in Dinamalar, 04.11.2020, Coimbatore, Green Deepavali Awareness by IFGTB ENVIS.